பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

06 02 2025 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஐ நா பாதுகாப்புக்குழுவில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
2. புதிய சாதனைகளை நோக்கி நாடு முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
3. அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்படுபவர்கள் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும் என்பதை அந்நாடு உறுதி செய்ய மத்திய அரசு தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்..
4. நைஜீரியாவில் பள்ளி ஒன்றில் நேரிட்ட தீ விபத்தில் 17 குழந்தைகள் உயிரிழந்தனர்.
5. சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரஷாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**<<<<<<>>>>>**

ஐ நா பாதுகாப்புக்குழுவில் விரிவான சீர்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று ஐ நா பொதுச்சபையின் 79-ஆவது அமர்வின் தலைவர் திரு **Philemon Yang**, குடியரசுத் தலைவரை சந்தித்தபோது அவர் இந்த கோரிக்கையை முன்வைத்ததாக குடியரசுத் தலைவர் மாளிகை செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஐ நா சபை உருவாக்கப்பட்டு 80 ஆண்டுகள் நிறைவடைய உள்ள நிலையில், அந்த சபையின் தலைமை பதவியை வகிப்பதற்காக திரு **'Philemon-**க்கு, குடியரசுத் தலைவர் பாராட்டுகளை தெரிவித்துக்கொண்டார்.

இந்த ஆண்டில் வளர்ச்சிக்கான நிதியுதவி குறித்த நான்காவது மாநாடு மற்றும் ஐ நா-வின் பெருங்கடல் தொடர்பான மூன்றாவது மாநாடு போன்ற முக்கியமான நிகழ்வுகள் நடைபெற இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த மாநாடுகளில் இந்தியா பங்கேற்று, ஆக்கப்பூர்வமான கருத்துக்களை தெரிவிக்கும் என்றும் திருமதி திரௌபதி முர்மு உறுதியளித்தார்.

**<<<<<<>>>>>**

புதிய சாதனைகளை நோக்கி நாடு முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு இன்று மாநிலங்களவையில் பதிலளித்து பிரதமர் பேசினார்.

முன்னேற்றத்தை நோக்கி நாடு பீடு நடைபோடும் நிலையில், வளர்ச்சிக்கான புதிய உச்சத்தை அடைவதற்கு நம் அனைவரின் பங்களிப்பும் முக்கியமானது என்று அவர் குறிப்பிட்டார்.

அரசின் கொள்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவிப்பதுதான் ஜனநாயகத்தின் உண்மையான அடையாளம் என்று பிரதமர் தெரிவித்தார்.

எனினும், வெறும் எதிர்ப்பு என்ற பெயரில் நாட்டின் வளர்ச்சிப்பாதைக்கு தடையை ஏற்படுத்துவதால், வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

இதுபோன்ற தடைகளிலிருந்து விடுபட்டு, தொடர்ந்து முன்னேறி செல்வோம் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து, மாநிலங்களவையிலும் குடியரசுத் தலைவரின் உரை குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேறியது.

<<<<<<>>>>>

வெளிநாடுகளில் சட்ட விரோதமாக வசிக்கும் மக்களை நாடு கடத்துவது வழக்கமான நடைமுறைதான் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருந்ததாக கூறி, 205 இந்தியர்களை அந்நாட்டு அரசு பஞ்சாப் மாநிலத்திற்கு அனுப்பிவைத்த நிலையில், மாநிலங்களவையில் இன்று அதுதொடர்பாக, திரு ஜெய்சங்கர் அறிக்கை தாக்கல் செய்தார்.

ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டை சேர்ந்த குடிமக்கள் வெளிநாடுகளில் சட்டப்பூர்வமாக தங்கியிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று சர்வதேச சட்டங்களும், நெறிமுறைகளும் வலியுறுத்துவதை அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2009-ஆம் ஆண்டு 734 இந்தியர்கள் அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நாடு கடத்தப்படுபவர்கள் கண்ணியமாக நடத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்வதற்காக அமெரிக்க அரசுடன், மத்திய அரசு தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி வருவதாகவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

இந்த அறிக்கையை வெளியுறவு அமைச்சர் மக்களவையிலும் தாக்கல் செய்து உரையாற்றினார்.

<<<<<<>>>>>

ஆச்சாரிய வித்யாசாகர் மகாராஜின் போதனைகள் சமுதாய ஒற்றுமைக்கு அவசியம் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

சட்டீஸ்கர் மாநிலம் **Dongargarh** என்ற இடத்தில் ஆச்சாரிய வித்யாசாகர் மகாராஜின் நினைவிடத்தில் திரு அமித் ஷா அஞ்சலி செலுத்தினார்.

அப்போது பேசிய அவர், அகிம்சை, கருணை மற்றும் உண்மையை பின்பற்றி சமுதாயத்தை ஒன்றிணைப்பதற்கு ஆச்சாரிய வித்யாசாகர் மகாராஜ் பாடுபட்டதாக கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், சட்டீஸ்கர் முதலமைச்சர் திரு விஷ்ணு தியோ சாய், துணை முதலமைச்சர் திரு விஜய் சர்மா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

(*சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்*)

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவின் ஒரு பகுதியாக ஆறு நாட்கள் நடைபெறும் பழங்குடியின இளையோர் பங்குபெறும் கலாச்சார நிகழ்ச்சி தொடங்கியுள்ளது.

நாடு முழுவதும் இருந்து எட்டாயிரத்திற்கும் மேற்பட்ட பழங்குடியின இளைஞர்கள் இந்த கலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ளனர்.

பிர்சா முண்டாவின் 150-ஆவது பிறந்த நாளையொட்டி, இந்தாண்டு பழங்குடியினர் பெருமை தின ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், கும்பமேளாவில் இந்த ஐந்து நாட்கள் கலாச்சார கொண்டாட்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பழங்குடியினர் நலத்துறை இணையமைச்சர் திரு துர்காதாஸ் **Uikey** பங்கேற்று உரையாற்றினார்.

சமூகத்தில் புரட்சிகர மாற்றங்களை கொண்டுவருவதில் இளைஞர்களின் பங்கு முக்கியமானது என்றும், சமுதாயத்தில் அமைதியை ஏற்படுத்துவதுடன், தற்சார்பு இந்தியாவை உருவாக்குவதிலும் இளைஞர்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்றும் திரு துர்காதாஸ் **‘Uikey** கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியின் நிறைவாக, நாடு முழுவதிலும் இருந்து 25 பழங்குடியின இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

(*சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்*)

**<<<<<<>>>>>**

தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்துள்ள நிலையில், வாக்குகள் பதிவான மின்னணுஇயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டு, தேர்தல் ஆணையம் மற்றும் காவல்துறை அதிகாரிகள் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் அடங்கிய இயந்திரங்கள் 11 மாவட்டங்களில் அடங்கிய 19 வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

70 உறுப்பினர்களை கொண்ட தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் 699 வேட்பாளர்கள் போட்டியிட்டுள்ளனர்.

சுமார் 60 புள்ளி நான்கு இரண்டு சதவீத வாக்குகள் பதிவாகியிருப்பதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்குகள் நாளை மறுநாள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும்.

**<<<<<<>>>>>**

மத்தியபிரதேச மாநிலம் ஷிவ்புரி மாவட்டத்தில் விமானப்படையின் ஜெட் போர் விமானம், விபத்துக்குள்ளானது.

எனினும், அதில் இருந்த இரண்டு விமானிகளும், விமானத்தில் இருந்து குதித்து உயிர் தப்பினர்.

**'Behta '** என்ற கிராமத்தில் நிகழ்ந்த இந்த விபத்தையடுத்து, காவல்துறையினர் மற்றும் தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு உடனடியாக சென்று மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர்.

இதில் யாருக்கும் காயம் ஏற்பட்டதாக தகவல் இல்லை.

விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்த விமானப்படை உத்தரவிட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

நைஜீரியாவின் வடமேற்கு பகுதியில் இஸ்லாமிய பள்ளி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 17 குழந்தைகள் உயிரிழந்தனர்.

**Zamfara** மாகாணத்தின் **Kaura Namoda** மாவட்டத்தில் உள்ள அந்த பள்ளியில் தீ விபத்து ஏற்பட்டபோது, நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் இருந்ததாகவும், மேலும் 17 குழந்தைகள் காயமடைந்ததாகவும் மீட்புக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீ விபத்தில் குழந்தைகள் உயிரிழந்த சம்பவத்திற்கு நைஜீரியா அதிபர் திரு **Bola Tinubu** இரங்கல் தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>**

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட மிகப்பெரிய காட்டுத்தீ பாதிப்பால் 14 லட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக கலிபோர்னியா பல்கலைக்கழகம் வெளியிட்ட தகவல் தெரிவிக்கிறது.

இவற்றில் ஏராளமான வீடுகள் மற்றும் சொத்துக்களும் அடங்கும்.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் பொருளாதார நிபுணர்களான **Zhiyun Li** மற்றும் **Willam Yu** ஆகியோர் வெளியிட்டுள்ள கணிப்புகளின் அடிப்படையில் நடப்பாண்டில் அமெரிக்காவின் ஒட்டுமொத்த உற்பத்தி விகிதத்தில் இந்த இழப்பு பூஜ்யம் புள்ளி நான்கு எட்டு சதவீதம் என தெரியவந்துள்ளது.

**<<<<<<>>>>>**

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-2 என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Rio Noguchi -** ஜிம்பாப்வேயின் **Courtney John Lock** இணையை வென்றது.

**-------------**

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Manas Dhamne** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-1, 4-6, 6-1 என்ற செட் கணக்கில், ஜெர்மனியின் **Nikolai Barsukov** –வை வென்றார்.

----------------

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 249 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 21.4 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 149 ரன் எடுத்துள்ளது.

நாக்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இங்கிலாந்து, 47 புள்ளி நான்கு ஓவரில் 248 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக **Jos Buttler** 52 ரன் எடுத்தார்.

**Harshit Rana** அபாரமாக பந்துவீசி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

**<<<<<<END>>>>>**